பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

**19 12 2025** **7 15**

வெள்ளிக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. பங்களாதேஷில் வன்முறை சம்பவங்கள் அதிகரித்துள்ள நிலையில் இந்திய துணை தூதரக அதிகாரியின் இல்லத்தின் மீது பலத்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

2. 'வளர்ச்சியடைந்த இந்தியா' என்ற இலக்கை எட்ட நாட்டு மக்கள் அனைவரும் பங்களிக்க வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் அழைப்பு விடுத்துள்ளார்.

3. ஜோர்டன், எத்தியோப்பியா, ஓமன் நாடுகளில் அரசுமுறை பயணத்தை முடித்துக்கொண்டு பிரதமர் திரு.நரேந்திரமோடி நேற்றிரவு நாடு திரும்பினார்.

4. வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார இயக்க மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேறியது.

5. இந்தியா - தென்னாப்பிரிக்கா இடையேயான 5வது மற்றும் இறுதி டிவெண்ட்டி டிவெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பங்களாதேஷில் வன்முறை சம்பவங்கள் அதிகரித்துள்ள நிலையில் இந்திய துணை தூதரக அதிகாரியின் இல்லத்தின் மீது பலத்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சட்டோகிராமில் உள்ள அவரது இல்லத்திற்குள் நேற்றிரவு புகுந்த போராட்டக்காரர்கள் கடுமையாக தாக்குதல் நடத்தியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

தீ வைப்பு சம்பவங்களும் நடைபெற்றுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

முன்னதாக தலைநகர் டாக்காவில் முன்னணி பத்திரிகை அலுவலகங்கள் மீது கும்பல் ஒன்று தாக்குதல் நடத்தியது.

முன்னாள் பிரதமர் திருமதி ஷேக் ஹசினா தலைமையிலான அரசுக்கு எதிரான போராட்டத்தின்போது முன்னணியில் செயல்பட்ட மாணவர் சங்கத்தலைவர் ஷரீப் உஸ்மான் ஹாடியின் மரணத்தைத் தொடர்ந்து நள்ளிரவில் பெரும் வன்முறை நிகழ்ந்தது.

டாக்காவின் கர்வான் பஜார் பகுதியில் உள்ள முன்னணி ஊடக நிறுவனங்களில் நள்ளிரவு சுமார் 12 மணி அளவில் போராட்டக்காரர்கள் தாக்குதல் நடத்தினர்.

அங்கிருந்த ஆவணங்கள், கணினிகள் மற்றும் தளவாடங்களுக்கு தீ வைத்தனர்.

இந்தத் தாக்குதலின் போது பத்திரிகையாளர்கள் பலர் கட்டிடத்தின் உள்ளேயே சிக்கிக்கொண்டனர்.

இதனைத்தொடர்ந்து நள்ளிரவில் மற்றொரு முன்னணி ஊடக அலுவலகமும் தாக்கப்பட்டது.

தகவலறிந்து வந்த தீயணைப்புத் துறையினர் மற்றும் ராணுவத்தினர், அதிகாலையில் தீயைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

கிரேன் உதவியுடன் பத்திரிகையாளர்கள் மற்றும் ஊழியர்கள் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

பங்களாதேஷில் கடந்த ஜூலை மாதம் ஆட்சி மாற்றத்திற்கு எதிராக நடைபெற்ற போராட்டத்தின்போது முன்னணியில் செயல்பட்ட மாணவர் சங்கத் தலைவர் **Sharif Osman Hadi** உயிரிழந்தார்.

சிங்கப்பூர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த இன்குலாப் மஞ்ச் என்ற அமைப்பின் தலைவருமான அவர், சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்ததாக அந்நாட்டின் இடைக்கால அரசு தலைமை ஆலோசகர் திரு. முகமது யூனுஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் அடையாளம் தெரியாத நபர்களால் சுடப்பட்ட அவர் தலையில் பலத்த காயமடைந்து உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

<<<<>>>>

2047-க்குள் 'வளர்ச்சியடைந்த இந்தியா' என்ற இலக்கை எட்ட நாட்டு மக்கள் அனைவரும் தங்களது பங்களிப்பை வழங்க வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் அழைப்பு விடுத்துள்ளார்.

புதுதில்லியில் இந்திய கத்தோலிக்க ஆயர்கள் பேரவை சார்பில் நேற்று நடைபெற்ற கிறிஸ்துமஸ் பெருவிழாவில் கலந்து கொண்டு பேசிய அவர், கிறிஸ்துமஸ் திருநாள் என்பது அமைதி, இரக்கம், பணிவு மற்றும் மனிதநேயம் ஆகிய காலத்தால் அழியாத விழுமியங்களை அனைவருக்கும் நினைவூட்டுகிறது என்று குறிப்பிட்டார்.

பன்முகத்தன்மை கொண்ட இந்தியாவில், இத்தகைய பண்டிகைகள் சகோதரத்துவத்தை வளர்க்கும் பாலமாக அமைவதாகவும் அவர் பாராட்டு தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் மேற்குவங்க மாநில ஆளுநர் டாக்டர் சி.வி. ஆனந்தபோஸ் உள்படபலரும் கலந்துகொண்டனர்.

<<<<>>>>

ஜோர்டன், எத்தியோப்பியா, ஓமன் நாடுகளில் அரசுமுறை பயணத்தை முடித்துக்கொண்டு பிரதமர் திரு.நரேந்திரமோடி நேற்றிரவு நாடு திரும்பினார்.

முன்னதாக நேற்று ஓமன் அரண்மனையில் சுல்தான் **Haitham bin Tarik** சந்தித்த பிரதமர், இரு நாடுகளுக்கும் இடையே பல நூற்றாண்டுகளாக நிலவி வரும் நட்புறவை மேலும் வலுப்படுத்துவது குறித்து விரிவான ஆலோசனை நடத்தினார்.

ஓமனில் பல தலைமுறைகளாக வாழ்ந்து வரும் இந்திய வம்சாவளியினரைச் சந்தித்த பிரதமர், அவர்களின் மனங்களை வெல்லும் வகையில் உரையாடினார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான தற்போதைய உறவை, 'பன்முகத்தன்மை கொண்ட உத்திசார் ஒத்துழைப்பு என்று இரு தலைவர்களும் ஒருமனதாக தெரிவித்தனர்.

இந்தியா - ஓமன் இடையிலான இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க சந்திப்பு, பாதுகாப்பு, வர்த்தகம் மற்றும் கலாச்சார உறவுகளில் ஒரு

புதிய உத்வேகத்தை அளித்துள்ளதாக அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

<<<<>>>>

மகாராஷ்டிர மாநிலத்தில் காங்கிரஸ் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான திருமதி **Pradnya Satav** பிரத்ஞா சதாவ், தமது பதவியை ராஜினாமா செய்துவிட்டு பிஜேபியில் இணைந்துள்ளார்.

சட்ட மேலவை உறுப்பினரான அவர் நேற்று மும்பையில் மாநில பிஜேபி தலைவர் திரு. ரவீந்திர சவான் மற்றும் வருவாய்த்துறை அமைச்சர் திரு. சந்திரசேகர் பாவன்குலே ஆகியோர் முன்னிலையில் அவர் முறைப்படி பிஜேபியில் இணைந்தார்.

மராத்வாடா பிராந்தியத்தின் ஹிங்கோலி மாவட்டத்தைச் சேர்ந்த இவர், கட்சி மாறியிருப்பது அம்மாநிலத்தில் நடைபெறவுள்ள உள்ளாட்சித் தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு பலத்த பின்னடைவாகக் கருதப்படுகிறது.

<<<<>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார இயக்க மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேறியது.

ஏற்கனவே இந்த மக்களவையில் நிறைவேறிய இந்த மசோதா நேற்று மாநிலங்களவையில் நீண்ட விவாதத்திற்குப் பிறகு நிறைவேறியது.

கிராமப்புறத்தில் உள்ள விவசாய தொழிலாளர்களுக்கு ஆண்டுக்கு 125 நாட்கள் வேலை வழங்குவதை இந்த மசோதா உறுதி செய்கிறது.

முன்னதாக இந்த மசோதாவிற்கு எதிர்ப்பு தெரிவித்து நாடாளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தூய்மையான எரிசக்திக்கு உதவும் அணுசக்தி மேம்பாட்டு மசோதாவும் நேற்று மாநிலங்களவையில் நிறைவேறியது.

<<<<>>>>

விழுப்புரம் மாவட்டத்தில் பிரதமரின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் 2024-25 ஆண்டில் விவசாயிகள் 87 கோடி ரூபாய் காப்பீடு தொகை பெற்று பயனடைந்துள்ளனர்.

நடப்பாண்டில் இதுவரை 3 ஆயிரத்து 811 விவசாயிகள் பயிர் காப்பீடு செய்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte - Suresh - 43 Sec)**

<<<<>>>>

தேசியவாத காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும், முன்னாள் அமைச்சருமான திரு. **Manikaro Kokate**-வை கைது செய்ய மகாராஷ்டிர மாநில காவல் துறையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அவருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட பிணையில் வர முடியாத வாரன்டுடன் நாசிக் நகர காவல்துறையினர் நேற்றிரவு மும்பை பாந்த்ரா பகுதிக்கு வந்தனர்.

உடல்நிலை சரியில்லாத காரணத்தால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள திரு. **Manikaro Kokate**-வுக்கு இன்று பரிசோதனை நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அவரது உடல்நிலை குறித்து மருத்துவரிடம் கேட்டறிந்த காவல்துறையினர் அவரை காவலில் எடுத்து விசாரிப்பது குறித்து மருத்துவர்களுடன் ஆலோசனையில் ஈடுபட்டனர்.

<<<<>>>>

கோவா தீ விபத்தில் 25 பேர் உயிரிழப்புக்கு காரணமான விடுதி உரிமையாளரின் காவல் மேலும் 4 நாட்கள் நீட்டிக்கப்பட்டுள்ளது.

கடந்த 6ஆம் தேதி இந்த விடுதியில் ஏற்பட்ட தீ விபத்து தொடர்பாக இணை உரிமையாளர் அஜய் குப்தா, கடந்த 10ஆம் தேதி புதுதில்லியில் கைது செய்யப்பட்டார்.

7 நாள் காவலில் வைத்து விசாரிக்கப்பட்ட பின்னர் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட அவரது காவல் மேலும் 4 நாட்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

அமெரிக்காவில் தனியாருக்கு சொந்தமான விமானம் விபத்துக்குள்ளானதில் பிரபல NASCAR கார் பந்தய வீரர் கிரெக் பிஃபிள் உட்பட 7 பேர் உயிரிழந்தனர்.

அந்நாட்டின் வட கரோலினா மாகாணத்தில் உள்ள Statesville பிராந்திய விமான நிலையத்தில், ஒரு சிறிய ரக தனியார் விமானம் தரையிறங்க முயன்றபோது விபத்துக்குள்ளானது.

இந்த கோர விபத்தில் விமானத்தில் பயணம் செய்த 7 பேரும் உயிரிழந்ததாக மாகாண காவல்துறை உறுதிப்படுத்தியுள்ளது.

விபத்திற்குப் பிறகு ஏற்பட்ட தீயினால் பயணிகளின் பட்டியலை அதிகாரப்பூர்வமாக வெளியிடுவதில் சிக்கல் இருப்பதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

இருப்பினும், உயிரிழந்தவர்களில் கிரெக் பிஃபிள் மற்றும் அவரது நெருங்கிய குடும்ப உறுப்பினர்களும் அடங்குவர் என்று அவர்கள் கூறினர்.

55 வயதான கிரெக் பிஃபிள், 50-க்கும் மேற்பட்ட பந்தயங்களில் வெற்றி பெற்றுள்ளார்.

<<<<>>>>

இந்தியா - தென்னாப்பிரிக்கா இடையேயான 5வது மற்றும் இறுதி டிவெண்ட்டி டிவெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

அகமதாபாதில் இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

--------------

உலக பேட்மிண்டன் இறுதிப்போட்டியின் இரண்டாவது ஆட்டத்தில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் - சிராக் ஷெட்டி இணை வெற்றி பெற்றது.

சீனாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்த இணை, 21-11, 16-21, 21-11 என்ற செட் கணக்கில் இந்தோனேஷியவின் Alfian - Fikri இணையை வென்றது.

------------

பங்களாதேஷ் சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Mikel Vargees - Farza Nazreen இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**கலப்பு இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 21-19, 21-23, 21-17 என்ற செட் கணக்கில் பங்களாதேஷினி Sifat Ullah - Bristi Khatun இணையை வென்றது.**

**---------------**

**19 வயதுக்குட்பட்டோருக்கான ஆசியக் கோப்பை ஒருநாள் கிரிக்கெட் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று இலங்கையை எதிர்கொள்கிறது.**

**துபாயில் இப்போட்டி காலை 10.30 மணிக்கு தொடங்குகிறது.**

**<<<<The End>>>>**